18.11.2024

அசல் வழக்கு எண்: 177/2014

வா.சா.2 சாட்சி பழனியம்மாள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கின் விபங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிராதில் கண்ட விபரங்களை படித்து பார்த்தேன் என்றால் படித்து பார்த்தேன். பிராதில் யார் யார் பெயரை குறிப்பிட்டுள்ளார் என்றால் எனது பெயரையும் எனது அக்கா அழகுமீனா பெயரையும் குறிப்பிட்டுள்ளார். நான் வாதியின் சகோதரி என்பதற்கு எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து வாதிக்கு என்ன உரிமை ஏற்பட்டுள்ளது என்பது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். என்ன உரிமை ஏற்பட்டுள்ளது என்றால் தாவா சொத்து எனது தாத்தா சம்பாரித்த சொத்தாகும். அதனால் எனது அண்ணனுக்கு உரிமை உண்டு. வாதிக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்றாலும் அவ்வாறு இருக்கையில் எங்களது உரிமையை வாதிக்கு விட்டுக்கொடுத்துவிட்டதாக பொய்யாக சொல்கிறோம் என்றாலும் சரியல்ல.

சங்கிலித்தேவர் என்பது யார் என்றால் எனது தகப்பனாரை பெற்ற தாத்தா ஆவார். அவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 ஆண் மக்கள் ஆவார்கள். தாவா சொத்து எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.